★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Entered as a Newspaper at the General Post Office Sri Lanka Under No QB/8945/78

மலர் 21 ஆடி 16 றம்ழான் 7 இதழ் 170
யாழ்ப்பாணம் புதன்கிழமை 1-8.79

மத்திய கிழக்கு நாடுகளில்
வேலை வாய்ப்பு
கீழ்கண்ட தொழில்களுக்கு
வேலையாட்கள்
தேவை

சலவைத்தொழிலாளர் (LaundryMen)
சாரதிகள் (Drivers)
தச்சு வேலையாளர் (Carpenters)
மேசன்மார்கள் (Mesans)
கூலிவேலையாட்கள் (Labourers)
ஹவுஸ் மேய்ட்ஸ் (Housemaids)

குட்வில் (T) ரவல்
Goodwill Travel
No. 635, ஆஸ்பத்திரி வீதி,
(சிங்கள பாடசாலை முன்பாக)
யாழ்ப்பாணம்.

## வெள்ளக் கொடுமை: பல லட்சம் பேர் தவிப்பு!

(புதுடில்லி)

இந்தியாவின் வடமாநிலங்களில் ஏற்பட்டுள்ள மோசமான வெள்ளத்தினால் பல லட்சம் மக்கள் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டுள்ளனர்!

உத்தரப் பிரதேசம், பீஹார் ஆகிய மாநிலங்களில் லட்சக்கணக்கான மக்கள் வெள்ளத்தினால் தவித்துக்கொண்டிருக்கின்றனர் என்றும், இங்கு வெள்ளநிலைமை சீர்கெட்டுவிட்டது என்றும் நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

வடபீஹாரில் மட்டும் பதினைந்து லட்சம் பேர் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் இப்பகுதியில் வெள்ளம் தொடர்ந்து பெருகிக்கொண்டிருக்கிறது என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS
RECEIVED 1979-8-1
PERIODICALS DIVISION

# யாழ்ப்பாணத்தில் பிராந்திய வானொலிநிலையம்

## ராஜாங்க அமைச்சர் நடவடிக்கை

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் பிராந்திய ஒலிபரப்புநிலையம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை ராஜாங்க அமைச்சர் திரு ஆனந்ததிஸ்ஸடி அல்விஸ் மேற்கொண்டுள்ளார்.

இதற்கான அரசின் அனுமதியை அவர் கோரியுள்ளார்.

இந்நிலையம் யாழ்ப்பாணத்தில் நிறுவப்படும் பட்சத்தில் ஒலிப்பதிவு நிலையம், சபா மண்டபம், ஒலிபரப்புப்பகுதி மற்றும் நிலையத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களுக்கான வாசஸ்தலங்கள் ஆகியன நிறுவப்படும்.

யாழ்ப்பாண மக்களுக்கு தமிழ்சேவை ஒன்று ஆங்கில சேவை இரண்டு ஆகியவற்றின் நிகழ்ச்சிகளை உத்தேசநிலையம் நிறுவப்படும்வரை, கடைசி மூன்று மணித்தியாலங்களுக்காவது தெளிவாக ஒலிபரப்பி நடவடிக்கை எடுக்குமாறு திரு. அல்விஸ், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத் தலைவர் திரு. ஏமன் காரியகரவணவை பணித்துள்ளார். (இ)

## துறைமுக அதிகாரசபை

(கொழும்பு)

ஒருங்கிணைக்கப்பட்ட புதிய துறைமுக அதிகாரசபை, இன்று முதல் இயங்கத் தொடங்குகிறது.

## பூநகரியில் பொலிஸ் நிலையம்

(யாழ்ப்பாணம்)

பூநகரியில் அடுத்த மாதம் பொலிஸ் நிலையமொன்று திறந்துவைக்கப்[illegible] [illegible] நிலையத்தின் பொறுப்பதிகாரியாக இன்ஸ்பெக்டர் வேதமுத்து கடமையாற்றுவார்.

இதுவரை காலமும் பூநகரிப் பகுதி, கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தின் கட்டுப்பாட்டிலேயே இயங்கிவந்தது.

## ஒரே பார்வையில் இந்திய அமைச்சரவை

(புதுடில்லி)

நேற்றுமுன்தினம்வரை பதவியேற்றுள்ள இந்திய (மத்திய) அமைச்சரவையின் முக்கியஅங்கத்தவர்களும், அவர்கள் வகிக்கும் அமைச்சு விபரங்களும் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | சரண்சிங் | — பிரதம மந்திரி |
| 2. | வை. பி. சவான் | — துணைப்பிரதமர், உள்துறை |
| 3. | எச். எம். பகுகுணா | — நிதி |
| 4. | எஸ். என். மிஸ்ரா | — வெளிவிவகாரம் |
| 5. | சி. சுப்பிரமணியம் | — பாதுகாப்பு |
| 6. | பிரம்மானந்தரெட்டி | — தொழில்துறை |
| 7. | டாக்டர் கரண்சிங் | — கல்வி |
| 8. | பிர. பராய் | — பெற்றோலியம், ரசாயனம், உரவிநியோகம் |
| 9. | பிஜு பட்நாயக் | — எஃகு, சுரங்கம், நிலக்கரி |
| 10. | ரவிராய் | — சுகாதாரம், குடும்பநலம் |
| 11. | புருஷோத்தம் கௌஸிக் | — செய்தி ஒலிபரப்பு |
| 12. | ஹிதேந்திரதேசாய் | — வர்த்தகம் சிவில் சப்ளை |
| 13. | ராம் கிங்கர் | — வீட்டுவசதி பொதுப் பணித்துறை |
| 14. | எச். ஆர். கன்னா | — சட்டம், நீதி, கம்பனி |
| 15. | கே. சி. பந்த் | — எரிசக்தி |
| 16. | மொகமட் குரேஷி | — தொழிலாளர் நலம் |
| 17. | பசுலூர் ரஹ்மான் | — சுற்றுலா, சிவில் விமானபோக்குவரத்து |
| 18. | பிரம் பிரகாஷ் | — விவசாயம் |
| 19. | சுல்பிகார் உல்லா | — தகவல் தொடர்பு |

## 'இனங்களுக்குள் விசுவாசம் ஏற்பட பாரபட்சம் தவிர்க்கப்படவேண்டும்'

### ஜனாதிபதிக்கு ஞானமூர்த்தி தந்தி

(உடுப்பிட்டி)

"இந்நாட்டில்வாழும்தமிழ், சிங்கள இனங்களுக்குள் பாகுபாடு இல்லாது தவிர்க்கப்பட்டாலே இரு இனங்களுக்குள்ளும் நம்பிக்கையும் விசுவாசமும் ஏற்படும்"

இவ்வாறு குறிப்பிடும் தந்தியொன்றை வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் திரு. எஸ். ஞானமூர்த்தி ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

பிரஸ்தாப தந்தியில் தொடர்ந்து கூறப்பட்டுள்ளதாவது;

"புதிய அரசியல் சாஸனத்தின் 12 (2), 27 (6) பிரிவுகளில் அடிப்படை உரிமைகளில் சாதி, சமய, இன, அரசியல் பாகுபாடு இல்லாமல் சகல பிரஜைகளுக்கும் சம உரிமை கொடுக்கப்படும் என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது

"ஆனால், பல திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் சிங்கள மொழியில் எவ்வித சித்தியும் பெறாதவர்களுக்குப் பதவி உயர்வு, சம்பள உயர்வு இல்லாமல் உள்ளது. ஆதலால் இத்தகைய பாகுபாட்டை நீக்கி தமிழ் சிங்கள மக்களிடையே பரஸ்பர நல்லெண்ணத்தையும், ஒற்றுமையையும் ஏற்படுத்தி எல்லோருக்கும் "தந்தை" போன்று விளங்க வேண்டும்." (அ)

## "நம்பிக்கை வாக்கெடுப்பில் புதிய அரசு நிச்சயம் கவிழும்"

### ஜெகஜீவன்ராம் கருத்து

புதுடில்லி, ஜூலை 31

இந்திய லோக சபையில் ஆகஸ்ட் மாதம் 8வது வாரத்தில் "ஜனதா-ம" -காங்கிரஸ் கூட்டு அரசின் மீது நம்பிக்கைப் பிரேரணை கொண்டுவரப்படும்போது அரசைக் கவிழ்க்க சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியுள்ளோம். காபந்து அரசை விட பலவீனமான புதிய அரசு அப்போது வீழ்ச்சியுறுவது நிச்சயம்".

இவ்வாறு ஜனதாகட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் நிருபர்கள் மத்தியில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"முன்னர் பெரும்பான்மையாக இருந்து சில நெருக்கடி காரணமாக பின்னர் சிறுபான்மையானதே ஜனதா கட்சி. ஆனால் புதிய கூட்டரசாங்கம் ஆரம்பத்திலிருந்தே சிறுபான்மையாக உள்ளது" என்றும் திரு. ஜெகஜீவன்ராம் கூறினார்.

### ஸ்டீபன் ஜெகஜீவன் சந்திப்பு

இதற்கிடையே எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜெகஜீவன்ராம் நேற்று, இந்திரா காங்கிரஸ் கட்சியின் பாராளுமன்றக் குழுத்தலைவர் திரு ஸ்டீபனைச் சந்தித்தார்.

இச்சந்திப்பு பற்றி பத்திரிகை நிருபர்களிடம் கருத்து எதுவும் வெளியிட மறுத்த திரு ஸ்டீ

[6ம் பக்கம் பார்க்க]

## கருணாநிதி லஞ்ச வழக்கு ஆகஸ்ட் 31வரை ஒத்திவைப்பு

சென்னை, ஜூலை 31

விமானத்திலிருந்து இரும்பு நாகினி தெளிப்பதற்கு விமானக்கம்பனிகளிடமிருந்து லஞ்சம் வாங்கியதாக தமிழக முன்னாள் முதல்வர் திரு மு கருணாநிதி மீதும் முன்னாள் அமைச்சர் திரு அன்பில் தர்மலிங்கம் மீதும் சுமத்தப்பட்டிருந்த வழக்கை, சென்னை முதலாவது துணைசெஷன்ஸ் நீதிபதி திரு. கே. எஸ். குருசாமி ஆகஸ்ட் மாதம் 31ம் திகதிவரை ஒத்திவைத்தார்.

இவ்வழக்கை செஷன்ஸ் நீதிமன்றம் விசாரிப்பதை எதிர்த்து திரு. கருணாநிதி தாக்கல் செய்திருந்த மனுவைத் தொடர்ந்து இவ்வழக்கை நிறுத்திவைக்குமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டதை அடுத்தே திரு குருசாமி வழக்கை ஒத்திவைத்தார். (இ)

## "யாழ். நிலைமையை நேரில் அறியவே வந்துள்ளோம்"

### நல்லெண்ணக் குழுவினர் கருத்து

(யாழ்ப்பாணம்)

"1974ம் ஆண்டு கண்டியில் தோட்டப்பகுதி மக்களுக்காக இந்த இயக்கத்தை ஆரம்பித்தோம். அப்பகுதி தமிழ்மக்களின் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தோம் 77 கலவரத்தைத் தொடர்ந்து தமிழ் சிங்கள பொதுமக்கள் உறவுக்கு இழுக்கப்பட்டோம். வகுப்புக்கலவர பின்னணி இதில் தலையிட நேர்ந்தது"

தென்னிலங்கையிலிருந்து வந்த நல்லெண்ண தூதுக்குழு உறுப்பினர் வணபிதா போல்

(6-ம் பக்கம் பார்க்க)

## காமன்வெல்த் மகாநாடு இன்று ஆரம்பம்

(லுசாகா)

காமன்வெல்த் மகாநாடு இன்று, ஸாம்பியா தலைநகர் லுசாகாவில் ஆரம்பமாகிறது.

மகாநாட்டுக்கு முதலில் வந்து சேர்ந்த தலைவர்களில் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சரும் ஒருவராகும். இலங்கைப் பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவும் இங்கு வந்து சேர்ந்துள்ளார்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட
நீதிமன்றத்தில்
வட்டுக்கோட்டை கிழக்கு மருதமுத்து கைம்பெண் அன்னம்மாவின் மரண சாதனம் சம்பந்தமாக.

தத்துவ நியாயாதிக்கம்
இல: 3387

மருதமுத்து மகேசன், வட்டுக்கோட்டை கிழக்கு - மனுதாரர்

மேலே குறிப்பிட்ட இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேற்படி மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளது.

அக்கறையுள்ளவரெவரேனும் 1978ம் ஆண்டு கார்த்திகை மாதம் 30-ந் திகதி காலை 10 மணிக்கு முன்னர் இந்நீதிமன்றத்தில் தோன்றி பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணமிருப்பின் காட்டுமாறு இத்தால் தேவைப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
ஒப்பம்
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்
21-11-78

காரணம் காட்டும் திகதி 3-8-79க்கு நீடிக்கப்பட்டது.
ஒப்பம்
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்.

31‹3

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட
நீதிமன்றத்தில்
காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை மகள் சாந்தநாயகியின் மரணசாதனம் இல்லாத சொத்துக்கள்
இறந்தவர்

மரணசாதன நியாயாதிக்க
இல: 1076/T

சிதம்பரப்பிள்ளை சிவபாதசுந்தரம் தும்பளை, பருத்துறை.

மனுதாரர்
எதிராக
சிதம்பரப்பிள்ளை கைம்பெண் செல்லம்மா, தும்பளை, பருத்தித்துறை.
எதிர்மனுத்தார்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதின்றத்தில் தொடுக்கப்பட்டு அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ம் ஆண்டு ஆவணி மீ 24ந் திகதி முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்?

நீதிமன்றக்கட்டளைப்படி
ஒப்பம்
க. விஸ்வலிங்கம்,
பதிவாளர்.

1979ம் ஆண்டு ஆனி மீ 13ந் திகதி

இராமசுவாமி சதானந்தன்,
சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்,
புலோலிதெற்கு- புலோலி.

3089

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## சீமெந்து விநியோகம்

சீமெந்து பெறுவதற்குரிய விண்ணப்பங்கள் தபால் மூலம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பங்கள் கிடைத்த (04) நான்கு வாரங்களுக்குள் பாவனையாளர்களுக்கு சீமெந்து விநியோகிக்கும் திகதி அறிவிக்கப்படும்.

தொழிற்சாலை
முகாமையாளர்.

3194

## அறிவித்தல்

எழுவைதீவு இறங்குதுறையில் 8 அடி நீளம் 4 அடி விட்டம் உள்ள ஆறு சீமெந்து கொங்கிறீற் பைப்பை நிறுத்தி மட்டப்படுத்தி தருவதற்கு கேள்விகள் கோரப்படுகின்றன. கேள்விப்பத்திரங்களை விலை கோரி விண்ணப்பிக்கவும். மற்றும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

S. இரங்கநாதன்,
அராலி கிழக்கு,
வட்டுக்கோட்டை.

3199

கரைதுறைப்பற்று
ப. நோ. கூ. சங்கம்,
முல்லைத்தீவு.

வெற்றிடம்

## பொது முகாமையாளர் தரம் III

மேற்படி பதவிக்கான விண்ணப்பம் இலங்கை வாசிகளிடமிருந்து கோரப்படுகிறது. விண்ணப்பங்கள் அண்மையிற் பெற்ற இரண்டு நற்சான்றிதழ் பிரதிகளுடன் 14-8-79க்கு முன்னதாகத் "தலைவர், ப நோ. கூ சங்கம், முல்லைத்தீவு" என்ற முகவரிக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும், தபால் மேலுறையின் இடது பக்க மூலையில் "விண்ணப்பம்- பொதுமுகாமையாளர் தரம் III" எனக் குறிப்பிட வேண்டும்.

தகமைகள்:-

1. கூட்டுறவு பயிற்சிபெற்ற பட்டதாரி.
2. 3 வருட அனுபவத்துடன் கூட்டுறவு வேலையாளர் தராதரப் (உயர்தர) பத்திரம்.
3. 5 வருடகால அனுபவம் பொருந்திய மூன்றாம் நாட் கூட்டுறவு பரிசோதகர் அல்லது
4. 20,00,000 வருடாந்த மொத்த விற்பனவாகக் கொண்ட வியாபாரத்தாபன மொன்றிஸ் மேல் முகாமைப் பதவி ஒன்றில் 3 வருடகால அனுபவமுடைய ஒருவர்.
5. காசுப்பிணை 2000/-ம், காணிப்பிணை 5000/-ம் கட்டப்பட வேண்டும்.

வயது:-
23 க்கும் 50 க்கும்உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

வேதனம்:-
340 — 590

15X10, 20X5 (உரிய விசேட படிகள் வழங்கப்படும்) மேலும் ஏனைய விபரம் தேவைப்படின், 12-5-72 திகதிய 5009/6/12 இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்

வை. நீலகண்டன்
தலைவர்
கரைதுறைப்பற்று ப நோ கூ. சங்கம்.
முல்லைத்தீவு,
29-7-79

3188

**WANTED LECTURERS**

To Coach Students for Chartered Preliminary. in English and Tamil Media

Subjects:
Accounting
Auditing
Business Mathematics
Environment (Law, Economics, General Commercial Knowledge)

Apply in Writing to,
Advertiser,
Room 11 H. Momsac Building,
Stanley Road.
Jaffna.

8198

## அந்தியேட்டி அழைப்பு



3-8-1979
செல்வி அருணாசலம் கமலாதேவி
(குடிவரவு குடியகல்வு திணைக்களம்)
தோற்றம்: 8-12-1949
மறைவு: 4-7-1979

உற்றார் உறவினர் நண்பர்களை அன்னாரின் அந்தியேட்டியில் கலந்து கொள்ளுமாறு அழைக்கப்படுகின்றனர்.

கா. வி. அருணாசலமும்
திருமதி அ. மாலைமணியும்
பிள்ளைகளும்
சிவசக்தி மகால்.
சிறுப்பிட்டி தெற்கு.

3193

செ. மகேசன்,
சட்டத்தரணி,
யாழ்ப்பாணம்.

## முதலிலேயே ஆக்கப்படும் முற்றுன கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட
நீதிமன்றில்

காலஞ்சென்ற ஜேம்ஸ் நோர்பத் ஜோசப்சதிற்றல் தெரு, யாழ்ப்பாணம் என்பவரினது மரணசாதன விடயத்தில்
மரணமெய்தியவர்

மரணசாதன நியாதிக்கம்
இல: 3451

ஜேம்ஸ் நோர்பத் ஜோசப் கைம்பெண் பீஸ் மேரி பணிக்கர ராணி, 13, சதிற்றல் தெரு, யாழ்ப்பாணம்.
மனுதாரர்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டவரான மரணமெய்தியவரின் மரணசாதனத்தை எண்பிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ளதெனவும் 1979-ம் ஆண்டு வைகாசி மாதம் 2-ம் நாளன்று அதில் அதற்கிணங்க முதலிலேயே முற்றுன கட்டளை பதியப்பட்டுள்ளதெனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்

1979-ம் ஆண்டு வைகாசி மாதம் 2-ம் நாளன்று திகதியிடப்பட்டது

3191

வல்வை

## அபிவிருத்திக்கு குழுக்கள் நியமனம்

[உடுப்பிட்டி]

வல்வெட்டித்துறை நகரின் அபிவிருத்தி வேலைகளைத் துரிதமாக மேற்கொள்ளுமுகமாக வல்வெட்டித்துறை நகரசபை நிதிக்குழு, சுகாதாரக்குழு ஆகியவற்றை நியமனஞ்செய்துள்ளது.

ஒவ்வொரு குழுக்களிலும் நான்கு நகரசபை உறுப்பினர்கள் வீதம் இடம்பெற்றுள்ளனர்.

[அ]

## வரி விளம்பரம்

பயிற்சி

வெளிநாடுகளில் தொழில்கள் பெறுவதற்கு நவீன முறையில் பயிற்சிகள் வெல்டிங் (Electric Arc & GAS) இலெக்ரோனிக் வயறிங் ரேடியோ (Transistor) Building Technology P M G Certificate முதலிய பயிற்சிகளுக்கு National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம்.

3173

## 'இளைஞர்விவகார அமைச்சு 10 ஆண்டின் முன் இருந்திருந்தால்

[உடுப்பிட்டி]

"புதிய பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் பொதுமக்கள் அனைவரையும் உள்ளடக்குவதுமட்டுமல்ல மாணவர் தலைவர்களும் பங்குகொள்ளக்கூடியதாக அமைந்துள்ளது. மாணவர்கள் தங்கள் குறைகளை ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும், பொதுமக்களுக்கும் வெளியிடக்கூடிய சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இளைஞர் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதுடன் இளைஞர் அமைதியீனத்துக்கும் தீர்வுகாணமுடியும். இதுபாரம்பரியமாக இருந்து வரும் பரம்பரை இடைவெளியை நிரப்புவதுடன் இன்று அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் மூன்றும் உலக நாடுகளிலும் உள்ள அரசாங்கங்களுக்குச் சவாலாக அமைந்துள்ள இளைஞர் அமைதியின்மைக்கும் முடிவுகட்ட முடியும்"

இவ்வாறு பருத்தித்துறை வட்டார திரு க. [illegible] வித்தியாலயத்தில் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தை ஆங்குரார்ப்பணம் செய்துவைத்துப் பேசுகையில் வித்தியாலய அதிபர் திரு. இ. வின்சென்ற் கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "எமது தார்மீக அரசு இளைஞர் விவகாரங்களுக்கு என ஓர் அமைச்சை உருவாக்கியுள்ளது. இந்த அமைச்சு பத்து வருடங்களுக்கு முன்பு அமைக்கப்பட்டிருந்தால் இலங்கையில் இளைஞர் அமைதியீனத்தின் சாயலையே [illegible] முடியாது" என்றார்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

பருத்தித்துறை மாவட்ட
நீதிமன்றில்

இல: 1068 T

காலஞ்சென்ற அல்வாய் மேற்கைச் சேர்ந்த கந்தவனம் சிதம்பரப்பிள்ளையின் மரணசாதனமில்லாது விட்டிறந்த சொத்துக்கள் சம்பந்தமாக
மரணமெய்தியவர்

கந்தவனம் சிதம்பரம் பிள்ளை கைம்பெண் இராசேஸ்வரி, அல்வாய் மேற்கு.
மனுதாரர்
எதிராக

1. சிதம்பரப்பிள்ளை ஞானகுமாரன் (பராயமற்றவர்கள்)
2. சிதம்பரப்பிள்ளை உதயகுமாரன் (பராயமற்றவர்கள்)
3. சிதம்பரப்பிள்ளை மகள் தருணி
4. கந்தவனம் அருளானந்தம் பாவரும் அல்வாய் தெற்கு, அல்வாய்.

பிரதிவாதிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிக்கப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்துக்களுக்கு எதிராகத் தத்துவம் பெறுவதற்கு மேற்படி நீதிமன்றில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979-ம் ஆண்டு ஆவணி மாதம் 3-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்கு காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1979-ம் ஆண்டு ஆடி மாதம் 16-ந் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி
க. விஸ்வலிங்கம்,
பதிவாளர்.

வரைவு:
S. சபாபதிப்பிள்ளை,
மனுதாரின் சட்டத்தரணி

3197

ஏழாலையில் நாளை

## ஆங்கில தினவிழா

[யாழ்ப்பாணம்]

ஏழாலை மகாவித்தியாலய ஆங்கிலத் தினவிழா நாளை வியாழக்கிழமை பிற்பகல் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்:

வட்டாரக் கல்லூரி அதிகாரி திரு எஸ். தனஞ்செயன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வட்டாரக் கல்வி அதிகாரி (ஆங்கிலம்) திருமதி ஜே ஏ வாணி, பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திரு. ஆர் சந்தையா ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றனர்.

(இ)

## பருத்தித்துறைக்கு இடமாற்றம்

[புலோலி]

பருத்தித்துறை நகரசபை அங்கத்தவரும் ஆசிரியருமான திரு சிவா கிருஷ்ணமூர்த்தி வவுனியாக் கல்வி வட்டாரப் பாடசாலையிலிருந்து பருத்தித்துறை கல்விவட்டாரத்தைச் சேர்ந்த ஹாட்லிக்கல்லூரிக்கு இடமாற்றப்பெற்றுள்ளார்.

[அ]

## ரஷ்ய நிபுணர்கள் ஹெலிகோப்டர்களை பழுதுபார்ப்பர்

(கொழும்பு)

இலங்கை விமானப் படைக்குச் சொந்தமான ஹெலிகோப்டர் விமானங்களை முற்றாகத் திருத்தியமைப்பதற்கு சோவியத்யூனியன் நிறுவனம் ஒன்றின் பொறியியலாளர்கள் விரைவில் இலங்கை வரவுள்ளனர்.

இன்னும் பதினைந்து தினங்களில் இதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படுமென்றும், இதனால் அரசாங்கத்திற்கு 90,000 ரூபாவரை செலவாகுமெனவும் தெரிவிக்கப்பட்டது

[இ]

## பொதுநல அமைப்பு நாடுகளின்

# அமைப்புக்கு ரொடீஷிய

## பிரச்னை வேட்டாக அமையுமா?

### இன்று லுசாக்காவில் மகாநாடு ஆரம்பம்

ஆபிரிக்க மண்ணிலே ஸாம்பியாவின் லுசாக்கா நகரின் புத்தம் புதிய முலங்ஷா மண்டபத்திலே இன்று ஆரம்பமாகும் 'பொதுநல அமைப்பு மாநாடு பொதுநல அமைப்பையே' சிதைத்துவிடுமோ எனும் அச்சம் அகில உலக அரசியல் அவதானிகள் மத்தியிலும் பரவலாக பரவியுள்ளது. தன்ஸானியா "ரொடீஷியப் பிரச்னை" எனும் "அரசியல் அணுக்குண்டை" பொதுநல அமைப்பு மாநாட்டில் பரீட்சித்துப் பார்க்க கங்கணம் கட்டி நிற்பதிலேயே பொதுநல அமைப்பு சிதையும் எனும் சிந்தனை எழுந்துள்ளது:

இருண்ட கண்டத்திலே இன்று ஆரம்பமாகும் இம் மாநாடு பல மாதங்களாகவே உலகின் கவனத்தை ஈர்த்தபடி இருந்தது. சகோதர இரத்தம் ஆறாக பெருக்கெடுப்பாய சந்தோஷமாய் மாநாட்டு மண்டபத்துள் நுழைய மனம்வராத "தன்ஸானியா" தனது தலைமையில் பொதுநல அமைப்பு நாடுகளின் பெரும்பான்மையினரான ஆபிரிக்க நாடுகளின் ஆதரவுடன் "ரொடீஷியப்" பிரச்னையை கிளப்ப உறுதி பூண்டுள்ளது: இவர்களுடைய ஆவேசத்துக்கு தூபமிட்ட பெருமை பிரிட்டனின் புதிய பெண் பிரதமர் மார்கிரேட் தச்சரையே சாரும். எதிலும் தீவிரம் காட்டும் தச்சர் அம்மையார் தீவிரமான முறையில் "ஸிம்பாவேரொடீஷியா"வை அங்கீகரித்து - குறைப் பிரவசமாகி உயிர்வாழமுடியாது தவிக்கும் முசோறீவா அரசுக்கு பிரிட்டிஷ் ஆதரவு என்னும் கண்ணாடிப் பெட்டியை கொடுக்கமுயல்வதே ஆபிரிக்க நாடுகளின் ஆவேசத்துக்குக் காரணம். அமெரிக்க அரசாங்கம் உட்பட உலகின் பல நாடுகளும் முசோறீவா அரசுக்கு பிரிட்டிஷ் ஆதரவு என்னும் கண்ணாடிப் பெட்டியை கொடுக்க முயல்வதே ஆபிரிக்க நாடுகளின் ஆவேசத்துக்குக் காரணம். அமெரிக்க அரசாங்கம் உட்பட உலகின் பல நாடுகளும் முசோறீவா அரசு "வெள்ளை ஆட்சியின் நிழல் விம்பமென" சந்தேகிப்பதும் இதற்கு சான்றாக இன்னும் ரொடீஷியாவிலே இரத்த ஆறு ஓடுவதும் முசோறீவா அரசுக்கு மூச்சிழுக்கவைக்கிறது. இதற்கு ஒட்சிசன் கொடுக்க பிரிட்டிஷ் அம்மையார் எடுத்த முயற்சியே "லூசாக்காவில்" பொதுநல அமைப்புக்கு மூச்சிழுக்கவைத்துள்ளது.

பொதுநல அமைப்பில் மொத்தம் 41 ஆசிய ஆபிரிக்க, பசுபிக்பிராந்திய நாடுகள் அங்கம்வகிக்கின்றன. இவற்றில் துவாலு, நாரு எனும் நாடுகள் முழுமையான அங்கத்துவத்தை இன்னும் பெறாத காரணத்தால் 39 நாடுகள் இன்று ஆரம்பமாகும் பொதுநல அமைப்பு மாநாட்டில் கலந்துகொள்கின்றன. இவற்றில் ஆபிரிக்கநாடுகளும் கணிசமான அளவு என்பது ஈண்டு குறிப்பிடத்தக்கது. முதல்முறையாக ஆபிரிக்கக் கண்டத்தில் ஆரம்பமாகும் இம் மாநாட்டில் ஸாம்பியா ஜனாதிபதி கவுண்டா சிங்கப்பூர் பிரதமர் லீகுவான்யூ, தன்ஸானியா ஜனாதிபதி நைரேரே போன்ற இலரே கடந்த பொதுநல அமைப்பு நாட்டு மகாநாடுகளில் பங்குபற்றிய தலைவர்கள். ஏனைய தலைவர்கள் எல்லாம் புதிய தலைவர்களாகவே இருக்கின்றனர். நமது நாட்டின் பிரதமர் கௌரவ பிரேமதாசாவும் புதிய தலைவர்களில் குறிப்பிடத்தக்கவர். ஆகவே புதியவர்களின் கருத்துக்கள் எப்படி அமையப்போகின்றன என்பதைப்பொறுத்தே பொதுநல அமைப்பின் எதிர்காலம் தங்கியுள்ளது.

பொதுநல அமைப்பு மாநாட்டில் ரொடீஷியப் பிரச்னை பூதாகரமெடுக்கும் எனக் கருதுவதால் ஆவணி 3ம் திகதி வெள்ளிக்கிழமை வரை அப்பிரச்னைக்கு நிகழ்ச்சி நிரலில் இடம்கொடுக்கப்படவில்லை. ஆனால் எட்டுத்தினங்கள் நடக்க இருக்கும் மாநாட்டில் மிகுதி ஐந்து தினங்களும் இப் பிரச்னையிலேயே செலவாகுமென எதிர்பார்க்கலாம் ஆயினும் இப் பிரச்னை மீதான விவாதங்களை மட்டுப்படுத்தவென ஒவ்வொரு நாட்டுத் தலைவர்களினதும் பேச்சுக்கள் ஒருமுறை மட்டுமே நிகழ்த்தப்படலாமென மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஆபிரிக்கப் பிரச்னை பூதாகரமாக இருப்பினும் ஆசிய பசுபிக் பிராந்திய நாடுகளைப் பொறுத்தவரை அவைகளுக்கும் அதிமுக்கிய பிரச்னைகள் இம் மாநாட்டில் உள்ளன, முக்கியமாக தென்கிழக்காசிய நாடுகள் அமைப்பின் ஐந்து நாடுகளில் மூன்று பொதுநல அமைப்பின் அங்கத்துவ நாடாக இருப்பதால் கம்பூச்சியப் பிரச்னை வியட்னாம் அகதிகள் பிரச்னை ஆகியவை முக்கிய இடம்வகிக்க உள்ளன. அதுவும் மாநாடு சிங்கப்பூர் பிரதமர் லீ-குவான்-யூவின் பேச்சுடன் ஆரம்பமாக இருப்பதால் தென்கிழக்காசியப் பிரச்னை ஆரம்பத்திலேயே களை கட்டிவிடுமென எதிர்பார்க்கலாம்.

மேலும் இம் மாநாட்டில் பொதுநலஅமைப்பு நாடுகளுக்கென 2ம் உலக யுத்தமுடிவில் அமைக்கப்பட்ட மார்சல் நிதிஒதுக்கீடு போன்று பொருளாதார பிரச்னைகளை சமாளிப்பதற்கான நிதியமொன்றை அமைக்கவேண்டும் எனும் யோசனையும்பொதுநல அமைப்பு நாடுகளின் கைத்தொழில் வளர்ச்சிக்கான ஒருகூட்டமைப் பொன்றை அமைக்கவேண்டுமென்னும்யோசனையும் ஆபிரிக்க ஆசிய நாடுகளால் சமர்ப்பிக்கப்படவுள்ளன. இவைபோன்றே வேறும்பல பொருளாதாரப் பிரச்னை சம்பந்தமான மதிப்பீடுகளும் இம் மாநாட்டில் பரிசீலிக்கப்படவுள்ளன. இவைபோன்ற வேறும் பல பொருளாதாரப் பிரச்னை சம்பந்தமான மதிப்பீடுகளும் இம் மாநாட்டில் பரிசீலிக்கப்படவுள்ளன:

எனவே எல்லாவகையிலும் ஆசிய-ஆபிக்க-பசுபிக் பிராந்திய நாடுகளைப் பொறுத்தமட்டில் இம் மாநாடு மிக முக்கிய பங்கினை வகிக்கின்றது. ஆயினும ரொடீஷியப் பிரச்னையை மட்டும் சமாளிக்கும் ஆற்றல் இம் மாநாடு பெறுமாயின் மட்டுமே பொதுநலஅமைப்பு தப்பிப்பிழைக்கும் இல்லையேல் பொதுநல அமைப்பின் சிதறலை தவிர்க்க இயலாதென்பதே அரசியல் அவதானிகளின் கருத்தாக அமைகிறது.

-பற்றிமாகரன்

## கோலமயில் வாகனனே பாதம் போற்றி

அருளொளிக்கும் சுந்தரவுன் அன்பர் போற்ற
அறுநான்கு நாட்பவனி செய்யும் கோவே
இருள்போலுந் துன்பத்தில் மூழ்கி நொந்து
ஏங்குகின்ற எம்மினத்தின் இன்னல் போக்கக்
குருவாகிப் பிரணவத்தின் பொருளைத் தந்தைக்
குபதேசஞ் செய்தநல்லைக் குமரா மீண்டும்
ஒரு காலம் மாற்றார்தம் மனத்தை மாற்றும்
உபதேசஞ் செய்தெமக்கு உதவு வீரே
தஞ்சமென வந்தடையும் அடியார்க் கென்றுந்
தாய்போலப் பரிந்தருளுந் தயாளா அன்று
விஞ்சுபுகழ்ச் சூரனைசங் காரஞ் செய்து
விண்ணவரைக் காத்தநல்லைக் குமரா இன்று
அஞ்சியஞ்சி வாழுமெமைக் கயர் தந்து
ஆண்டருள வேண்டுமென வந்தேன் இன்றும்
குஞ்சரிநல் மணவாளா வள்ளி காந்தா
கோலமயில் வாகனனே பாதம் போற்றி.

—உடுப்பிராய் மு. வைத்தியலிங்கம்

“எமது பிள்ளைகள்

## ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறுவது அவசியம்”

[உடுப்பிட்டி]

“எமது நாடு இன்று சர்வதேச ரீதியில் கல்வி, கலாச்சார, பொருளாதார, அரசியல் துறைகளில் பிரபல்யம் பெற்று விளங்குகின்றது. உலகப் பொது மொழியான ஆங்கில மொழியில் எமது நாடு பெற்றுள்ள சிறப்பும், திறமையும் எமது நாட்டிற்குச் சர்வதேசப் புகழைப் பெற்றுத் தந்துள்ளது. இதனாலேயே அரசு எமது கல்லூரிகளில் ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளதோடு மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் புலமைப் பரிசில்களும் வழங்கி வருகின்றது.”

இவ்வாறு கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் நடைபெற்ற ஆங்கில தின விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கல்லூரி அதிபர் திரு தோமஸ் சுப்பையா தெரிவித்தார்.

(5-ம் பக்கம் பார்க்க)

# “பதவிக்காக கொள்கையை விட்டுக்கொடுக்கமுடியாது”

## நாவலர் எமக்கு விட்டுச்சென்ற போதனை இதுவே என்கிறார் ‘சிவா’

[கொழும்பு]

“நாம் கொண்ட கொள்கையை பதவிக்காக விட்டுக் கொடுக்க முடியாது என்ற போதனையை நமக்கு விட்டுச் சென்றவர் ஆறுமுகநாவலர். அவர் நினைத்திருந்தால் அவருக்கிருந்த ஆங்கில, தமிழ் அறிவுக்கு எத்தனையோ பெரும் பதவிகளை வகித்திருக்கமுடியும், ஆனால் தன்னுடைய சமயத்தையும், மொழியையும் காப்பதற்காக அவர் கொண்டிருந்த கொள்கையை விட்டுக்கொடுக்க முன்வரவில்லை, இது நாம் அவரிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டிய முதலாவது பாடம்”

பம்பலப்பிட்டி சரஸ்வதிமண்டபத்தில் நடைபெற்ற நாவலர் நினைவு நூற்றாண்டு விழாவின்போது அஞ்சலியுரைநிகழ்த்திய நல்லூர்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவருமான திரு மு. சிவசிதம்பரம் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் சபையின் ஆதரவிலான இவ்விழா, சபையின் தலைவர் ஓய்வுபெற்ற நீதியரசர் திரு வி. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. திரு சிவசிதம்பரம் தமது உரையில் மேலும் கூறியதாவது:

பிழையைப் பிழை என்று உறுதியாகக் கூறும் கொள்கையையும் நாவலர் கொண்டிருந்தார். அவர் இன்று இருந்திருந்தால் என்ன செய்வார் என்பதை நாம் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். எமது நாட்டில் இன்று சரித்திரங்கள் புதிதுபுதிதாக எழுதப்படுகின்றன. எமது ஆலயங்கள் பற்றிய புதிய கருத்துக்கள் கூறப்படுகின்றன, நாவலர் இன்று இருந்திருந்தால் இவற்றையெல்லாம் முன்னின்று தடுத்திருப்பார். தாமே அப்பணியைச் செய்திருப்பார்.

### யாழ்ப்பாணச் சரித்திரத்தை..

இன்றைய நிலையில் யாழ்ப்பாணச் சரித்திரத்தை எழுதும் பொறுப்பை யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஏற்கவேண்டும். அப்போது திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய தலங்களின் தலபுராணங்கள் ஆராய்ச்சி செய்யப்படவேண்டும், நாவலர் இருந்திருந்தால் தமிழரின் ஆலயங்களை பாதுகாக்கும் முயற்சியில் முழுமூச்சோடு ஈடுபட்டிருப்பார், இவற்றையெல்லாம் செய்வதே இன்று நாம் அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாகும்.

நாவலர் சாதியைப்பற்றிச் சிந்திக்கவில்லை என்று சிலர் கூறுகிறார்கள். நாவலர் இன்று இருந்திருந்தால், எமது இனத்தின் ஒற்றுமையைக் குலைக்க விடாது இப்பிரச்னையை முன்னின்று ஒழித்திருப்பார். சமயம், மொழி இவற்றைப்பாதுகாக்கவேண்டிய கடமை ஒவ்வொருவருக்கும் உண்டு,

ஏழாலை புலவர் மு. கந்தையா எழுதிய 'நாவலர் பிள்ளைத் தமிழ்' நூல் விழாவில் வெளியீடு செய்யப்பட்டது. முதற்பிரதியை சக்தி நிறுவன அதிபர் திரு எஸ் சின்னத்துரையின் புதல்வர் பெற்றுக்கொண்டார், நூலாய்வு செய்த கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பொ பூலோகசிங்கம்.

“ஈழத்தில் நாம் தமிழர் என்று கூறுவது நாவலர் எமக்கு இட்ட பிச்சை” என்றார்.

விழாவில் 'சிவத்தமிழ்ச் செல்வி' தங்கம்மா அப்பாக்குட்டி 'நாவலரின் அறச் சிந்தை' என்ற பொருளில் சிறப்புரை நிகழ்த்தினார்.

'நாவலர் பிள்ளைத் தமிழ்' நூலாசிரியர் திரு மு கந்தையா, தலைவர் திரு சிவசுப்பிரமணியத்தால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். [ம]

## நூல் வெளியீடும் பாராட்டு விழாவும்

[யாழ்ப்பாணம்]

பிரம்மஸ்ரீ வ. குகசர்மா எழுதிய 'ஞானத்தமிழ்' என்னும் நூல் வெளியீட்டு விழாவும் குகசர்மாவின் 60 வது ஆண்டுப் பூர்த்தியை யொட்டிய பாராட்டு விழாவும் எதிர்வரும் 5ம் திகதி ஞாயிறு மாலை தெல்லிப்பழையில் நடைபெறவிருக்கிறது

துர்க்காதேவி ஆலய முன்றலில் பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மாவை ஆதீனம் சிவஸ்ரீ சண்முகநாதக் குருக்கள், நகுலேஸ்வரம் ஆதீனம் சிவஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள் ஆசியுரை வழங்குவர்.

நூலின் முதற் பிரதியை 'ஈழநாடு' முகாமையாளர் திரு து. சீனிவாசகம் பெற்றுக் கொள்வார் யாழ். பல்கலைக்கழகத் தமிழ்விரிவுரை

(5-ம் பக்கம் பார்க்க)

## மக்கள் கருத்து

### நெல்லியடி பட்டினசபை கவனிக்குமா?

நெல்லியடிப் பட்டினசபை எல்லைக்குட்பட்ட கன்பொல்லை ஸ்ரீ நாரத தமிழ்-சிங்கள மகா வித்தியாலய வீதியிலும், பழைய அம்பன் ஆஸ்பத்திரி வீதியிலும் மின்சார இணைப்பு வழங்கப்பட்டுள்ளபோதிலும் கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக மின் கம்பங்களில் மின் விளக்குகள் போடப்படாததால் வரியிறுப்பாளர்கள் மிகவும் கஷ்டமடைந்துவருகின்றனர்.

இதர சகல வீதிகளிலும் மின் விளக்குகள் போடப்பட்டுள்ள போதிலும் இவ்வீதிகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதால் இரவு வேளைகளில் இருள் மண்டிக் கிடப்பதுடன் திருடர் தொல்லையும் அதிகரித்துவருகின்றது.

இதுபற்றிப் பல தடவைகள் அறிவிக்கப்பட்டும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்படாததால் இப்பகுதி மக்கள் விசனம் அடைந்துள்ளனர்.

இனிமேலாவது நெல்லியடிப் பட்டினசபை அதிகாரிகள் ஆவன செய்து பிரஸ்தாப வீதிகளுக்கு ஒளியூட்டுவார்களா?

சின்னராசா.

கரவெட்டி.

## பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி விலை ஏற்றத்தை
# தடுப்பதே அரசின் உடனடிப் பணி
### புதிய நிதி அமைச்சர் பஹுகுணு உரை

புதுடில்லி, ஜூலை 31
"பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி விலை ஏற்றத்தைத் தடுப்பதுதான் புதிய அரசின் உடனடிப் பணியாகும்."
இவ்வாறு இந்திய நிதி அமைச்சர் திரு. எச். என் பஹுகுணு தெரிவித்துள்ளார்.
பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி, அதிகரித்துவரும் விலை ஏற்றத்தைக்கட்டுப் படுத்த அவசரமான உறுதியான நடவடிக்கைகளை உடனடியாக அரசு மேற்கொள்ளும் என்றும் அவர் கூறினார்.
நிதி அமைச்சின் அதிகாரிகள் மத்தியில் அவர் மேலும் கூறியதாவது:
"தொழில்துறை நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கப்படும் அதேவேளையில் ஒழுங்குக் கட்டுப்பாடும் உற்பத்தித்திறனும் பராமரிக்கப்படும்.
தொழிலாளர்களின் உரிமைகளை புதிய அரசு பரிவுடன் கவனிக்கும். ஒழுங்குக்கட்டுப்பாடு பேரம் நடத்தக்கூடிய தொன்றல்ல என்பதை சகலரும் உணரவேண்டும்." [இ]

### பாரசிக வளைகுடா யுத்த பிரதேசமாக பிரகடனம்

லண்டன், ஜூலை 31
பாரசிக வளைகுடாவை லண்டனிலுள்ள 'லோயிட்' காப்புறுதி நிறுவனம் ஒன்று யுத்தப்பிரதேசமாகப் பிரகடனம் செய்துள்ளது.
பாரசிக வளைகுடாவில் அடிக்கடி போர் நிகழ்வதால் அப்பகுதி ஊடாக எடுத்துச்செல்லப்படும் பொருட்களுக்கு காப்புறுதி வழங்குவதில்லை என்று அந் நிறுவனம் முடிவுசெய்துள்ளது. [இ]

### குற்றத்துக்கு இருபது கசைஅடி!

தெஹ்ரான், ஜூலை 31
நோன்பு நேரத்தில் உணவு அருந்திய குற்றத்துக்காக இருவருக்கு ஈரானிய அரசாங்கம் தலா இருபது கசை அடிகளை நேற்று வழங்கியது.

### பொதுநல அமைப்பு மாநாடு: மிஸ்ரா இந்தியப் பிரதிநிதி

புதுடில்லி, ஜூலை 31
லுஸாக்காவில் நாளை புதன்கிழமை ஆரம்பமாக இருக்கும் பொதுநல அமைப்பு நாடுகளின் மாநாட்டில் இந்தியாவின் சார்பில் புதிய வெளிநாட்டு அமைச்சர் திரு. எஸ் எம். மிஸ்ரா கலந்துகொள்கிறார்.
திரு. மிஸ்ரா மகாநாட்டில் நிகழ்த்தும் உரை குறித்து தமது அமைச்சின் உயர் அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார்.
முன்னாள் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் இம்மகாநாட்டில் கலந்து கலந்துகொள்வதற்கு முன்னர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. [இ]

### சரண்சிங்குக்கு 'ஹக்' பாராட்டு

புதுடில்லி, ஜூலை 31
இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையே சமீபகாலமாக பரஸ்பரம் பரிஉணர்வு வளர்ந்துவருகிறது. புதிய பிரதமர் திரு சரண்சிங்கின் ஆட்சிக்காலத்தில் இப்பரிஉணர்வு மேலும் வளரும்.
இவ்வாறு பாகிஸ்தான் அதிபர் ஜெனரல் ஸியாவுல் ஹக், இந்தியப் பிரதமர் திரு. சரண்சிங்குக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். [இ]

### குங்கிலியம் இறக்குமதி நடவடிக்கை

(பருத்தித்துறை)
வடமராட்சி மீனவர்களின் நன்மைகருதி மீனவர் கூட்டுறவுச் சங்கம் குங்கிலியத்தை இறக்குமதி செய்து விநியோகிக்கவுள்ளது.
இதற்கான நடவடிக்கைகளைப் பருத்தித்துறை மீனவர் கூட்டுறவுச் சங்கப் பொது முகாமையாளர் திரு. எஸ். கனகசேகரம் மேற்கொண்டு வருகிறார். [இ]

### தூத்துக்குடி திவிபத்து: சரண்சிங் ரூ. 1 லட்சம் உதவி

தூத்துக்குடி, ஜூலை 31
தூத்துக்குடியில் நேற்று முன்தினம் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் நிவாரணம் வழங்கும் பொருட்டு புதிய பிரதம மந்திரி திரு. சரண்சிங், பிரதம மந்திரி நிதியிலிருந்து ஒருலட்சம் ரூபா வழங்கியுள்ளார்.
மேலும் தமிழக மாநில அரசு மேற்கொள்ளும் நிவாரண நடவடிக்கைகளுக்கு உதவுமாறும் பிரதமர் உத்தரவிட்டுள்ளார். [இ]

### முதல் அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவில்லை

புதுடில்லி, ஜூலை 31
ஜனதா-ம-காங்கிரஸ் கூட்டரசின் முதலாவது மந்திரிசபைக்கூட்டம் நேற்று திட்டமிட்டபடி நடைபெறவில்லை.
அமைச்சரவைப் பொறுப்புகளை புதிய அமைச்சர்கள் பொறுப்பேற்பதில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அமைச்சரவைக் கூட்டம் நடைபெறவில்லையாம். [இ]

# ஜனதாகட்சிபிளவு: ஜே. பி. கவலை

பட்னா, ஜூலை 31
"மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் இந்தியாவை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக இன்று கட்சி அரசியலில் ஈடுபட்டிருப்பது துரதிர்ஷ்டவசமானது."
இவ்வாறு சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் தெரிவித்தார்.
ஜனதா கட்சி பிளவுபட்டது குறித்து கருத்துத்தெரிவிக்கையிலேயே திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் மேற்கண்டவாறு கூறினார்.
இன்று பட்னாவில் தம்மைச் சந்தித்த இருசட்டசபை உறுப்பினர்களிடமே அவர் மேற்கண்டவாறு கூறினார். [இ]

### தட்சரின் கூற்றை எதிர்க்க லுஸாக்கா நடவடிக்கை

லுஸாக்கா, ஜூலை 31
லுஸாக்காவில் நாளை புதன்கிழமை ஆரம்பமாகும் பொதுநல அமைப்பு நாடுகள் மகாநாட்டில் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரெட் தட்சர் ரொடீஷிய ஸிம்பாப்வே அரசு குறித்து தமது நிலையை விளக்கிக் கூறுவார்.
இதேவேளையில் திருமதி தட்சரின் கூற்றுக்கு எதிர்ப்பை வலுப்படுத்தும் பொருட்டு ஆபிரிக்க நாடுகள் முன்னணியின் உச்சி மகாநாட்டை லுஸாக்காவில் கடைசி நேரத்தில் கூட்டியுள்ளது என அறிவிக்கப்படுகிறது.
பிஷப். முஸரேவா தலைமையிலான ரொடீஷிய பெரும்பான்மை அரசை வரவேற்றுள்ள திருமதி தட்சர், பொதுநல அமைப்பு நாடுகள் மகாநாட்டிலும் முஸரேவா அரசுக்கு ஆதரவாகவே உரை நிகழ்த்துவார் என ஆபிரிக்க நாடுகள் எதிர்பார்க்கின்றன. [இ]

### 'பாடநூல்தவிர்ந்தவற்றையும் மாணவர் படிக்கவேண்டும்'

(பண்டத்தரிப்பு)
"பாடசாலை நூல்களைத் தவிர ஏனைய சிறந்த நூல்களையும், கட்டுரை, கதைப் புத்தகங்களையும் மாணவர்கள் தங்களது ஓய்வு நேரங்களில் படித்து தமது பொது அறிவை வளர்த்துக்கொள்ளவேண்டும். ஒரு நூலை வாசிக்கும்போது அதை இயற்றிய ஆசிரியருடன் நாம் சம்பாஷிக்கிறோம். அவரது அறிவுரைகளையும், சிறிய கருத்துக்களையும் செவிமடுக்கிறோம்."
இவ்வாறு பண்டத்தரிப்பு ஜசிந்தா பாடசாலையில் சர்வதேச சிறுவர் ஆண்டை முன்னிட்டு நிறுவப்பட்ட புதிய நூல் நிலையத்தைத் திறந்து வைத்து உரையாற்றுகையில், பண்டத்தரிப்பு பங்குத் தந்தை

(3-ம் பக்கம் பார்க்க)

CENTRIC
Robin
Sinha
Villiers
செண்ட்ரிக்
ஆயுள் காலம் பூராவும்
உழைக்கும் 2"
விவசாயப் பம்புகள்
உறுதிப்பாடுடைய செண்ட்ரிக் விவசாயப் பம்புகள் ஆண்டாண்டு காலம் உழைக்கின்றன. உங்கள் விருப்பத்திற்கு ஏற்றபடி, "ரொபின்", "சிங்க", "வில்லியர்ஸ்" ஆகிய எந்தவொரு இயந்திரத்துடனும் பூட்டி பவிக்கக்கூடிய பம்பு "செண்ட்ரிக்" மட்டுமே.

"செண்ட்ரிக்" பம்புகள் முற்றிலும் இரும்பினல் வார்க்கப்பட்டு உருவாக்கப் பட்டவை. ஆதலின் இவை காலத்தால் சிதைவுறுது உங்கள் ஆயுள் காலம் முழுவதும் உங்களுக்குத் தொல்லையில்லாத சேவை புரிகிறது,
1950ம் ஆண்டு முதல் இலங்கையில் பாவனையில் இருந்து வரும் "செண்ட்ரிக்", அதிசிறந்த பம்புகளில் ஒன்று என்பதற்கு இன்று உற்பத்தி செய்யப்படும் அநேக போலி பம்புகளே சான்று பகர்கின்றன.
உங்கள் நீர்ப்பாசனத் தேவைகளுக்கு நம்பிப் பாவியுங்கள் "செண்ட்ரிக்" பின்வரும் வியாபாரிகள் உட்பட யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சகல முன்னணி வர்த்தகர்களிடமும் கிடைக்கும்.
துர்க்கா ஆட்டோ ஹார்ட்வெயார் ஸ்டோர்ஸ்,
ஸ்டேன்லி ரோட், யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7204
மொத்த விற்பனை விசாரணைக்கு பின்வரும் எமது யாழ்ப்பாணத்தின் பிரதான விநியோகத்தர்களுடன் தொடர்புகொள்க:
நியூ டோன் இலெக்ட்ரிக்கல்ஸ்,
141, 143, ஸ்டேன்லி வீதி,
யாழ்ப்பாணம், தொலைபேசி: 7016.
ஹினசேன லிமிட்டெட்
இல. 4, ஹுனுப்பிட்டி ரோட்,
கொழும்பு 2, தொலைபேசி: 26558 - 9.
Mel ADS

**நாகம்ஸ்** [சுன்னாகம்]
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர்.
அஞ்சலிதேவி
**மர்மயோகி**

**வெஸ்லி**
மானிப்பாய்
Daily 4-45 & 7-00
சனி, ஞாயிறு 2-30
DIAMOND MERCENARIES


முன்னாள் வட்டு.

## எம். பி. இந்தியா பயணம்

[சுழிபுரம்]
முன்னாள் வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. ஆ. தியாகராசா இந்தியாவுக்கு பயணமானார். இவர் டாக்டர் பட்டம் பெறுவதற்காக இந்தியாவில் சோஷலிசம் என்னும் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பிக்கவுள்ளார். தமது ஓய்வு காலத்தை கல்வியிலும், யாத்திரையிலும் செலவு செய்து வரும் இவர், இவ் வருடக் கடைசியில் இலங்கை திரும்புவார்.


கடைசி சில தினங்கள்
**வின்சர்** [யாழ்ப்பாணம்]
போன்: 466
தினசரி 3 காட்சிகள்
10 30 2-00, 6-00
**பைலட் பிரேம்நாத்**
(ஈஸ்ட்மன் கலர்)
மறு அறிவித்தல் வரை 9-30 மணிக் காட்சிகள் காண்பிக்கப்படமாட்டா.

**ராஜா** யாழ். நகர்
தினசரி 4 காட்சிகள்
எம் ஜி ஆர் - ஈ. வி. சரோஜா நடித்த
**கொடுத்து வைத்தவள்**
(புதிய பிரதி)

**வெலிங்டன்** [யாழ்ப்பாணம்]
தினசரி; 10-30, 2-30, 6-30, & 9-45.
கே. பி. சுந்தராம்பாள் நடித்த
**ஒளவையார்**

**வீனஸ்** [யாழ். நகர்]
போன் 7603 தினசரி 4 காட்சிகள்
**கல்யாணபரிசு**
(புதிய பிரதி)

**REGAL** (Jaffna)
NOW SHOWING
Daily at 2-00 4-30, 7-00p.m. only
SIAN PHILIPS in
**MURPHY'S WAR**
(War Film)
மறு அறிவித்தல்வரை இரவு 9-30 மணிக் காட்சிகள் காண்பிக்கப்படமாட்டாது.

**Sridhar - Jaffna**
Daily 5 Shows at: 10-30 a m, 1-30, 4-15, 7-00 & 9 45 p m;
**The Day of THE JACKAL** (Color)
SUPERB SUSPENSE THRILLER...
"ஜக்கோல்" கலர்

4th Majestyk Week! Daily 5 Shows
**SHANTHI** JAFFNA Phone: 7642
10-30, 2-30, 4-45, 7-00 & 9-30 p m.
CHARLES BRONSON in
**"Mr. MAJESTYK"** Adults Color
குறிப்பு:
இரவு 9-30 காட்சியும் இப்பொழுது நடைபெறுகிறது

**ராணி** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - ஜமுனா - நாகையா
நடித்த
**நிச்சய தாம்பூலம்**
[புதிய பிரதி]

**மனோகரா** [யாழ். நகர்]
10-30, 2-30, 6-30, 9-45
பத்மினி-ராகினி-சுகுமார்
**சபரிமலை ஸ்ரீ ஐயப்பன்**
[பக்திப்படம்—ஈஸ்மன் கலர்]


## சங்கச் செய்திகள்

[வண்ணார்பண்ணை]
ஐக்கிய தேசியக் கட்சியின் கரவெட்டிக் கிளையின் புது வருட நிர்வாகிகள் வருமாறு
தலைவர் திரு கே சி எம் சிவகுமாரன், உபதலைவர் திரு ஆ சண்முகம், செயலாளர் திரு வி விந்புதானந்தன், உப செயலாளர் திரு கி தவராசா, பொருளாளர் ரி கந்தையா
8 பேர் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். [கு]

ஃ ஃ ஃ

[சங்கானை]
வட்டுக்கோட்டைத் தொகுதி பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளின் தெரிவு காரைநகர் இந்துக் கல்லூரியில் வட்டாரக் கல்வி அதிகாரி திரு ப சண்முகராசா தலைமையில் நடைபெற்றபோது பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்
திருவாளர்கள் வே நாகராசா [பண்டத்தரிப்பு இந்து கல்லூரி அதிபர்] காரை சுந்தரம்பிள்ளை [உப அதிபர் காரை நகர் இந்துக் கல்லூரி] எஸ் அருணாசலம் [சுழிபுரம் விக்ரோறியா அதிபர்] எஸ் சுப்பிரமணியம், எஸ் ஒப்பிலாமணி [கு]

ஃ ஃ ஃ

[வேலணை]
இந்து இளைஞர் பேரவையின் புங்குடுதீவுக் கிளையின் நடப்பு வருட நிர்வாகிகள் :-
தலைவர்-திரு க சுப்பிரமணிய ஐயர், உப தலைவர்- திரு சி அருள்நேசன், செயலாளர்- திரு வ கிருஷ்ணராஜன், உப செயலாளர்- திரு க குருபரன், பொருளாளர்- திரு ச மகேஸ்வரன், உப பொருளாளர்- திரு சே சிவசங்கர்.
12 பேரைக்கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது (கு)

ஃ ஃ ஃ

[அரியாலை]
அகில இலங்கைத் திருவள்ளுவர் மாசபையின் நிர்வாகிகள் ;-
தலைவர்- திரு எம் சிவதாசன், உப தலைவர்கள்- திருவாளர்கள் எம் கே இளையப்பு எஸ் வி மார்க்கண்டு, எஸ் விசுவலிங்கம், பொதுச் செயலாளர்- திரு எஸ் பி ஜீவானந்தம், செயலாளர்- திரு எஸ் செல்வராசா, பொருளாளர்- திரு எஸ் சொலமன், காரிய நிர்வாகசபை உறுப்பினர்கள்- 15 பேர்களும், பொது நிர்வாகசபை உறுப்பினர்கள் 52 பேர்களும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர் [கு]

0 0 0

[சுழிபுரம்]
வட்டுக்கோட்டைத்தொகுதி தமிழ் மகளிர் பேரவைப் பொதுக்கூட்டம் திருமதி ம அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றது. புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்
காப்பாளர் திருமதி கமலம் திருநாவுக்கரசு, திருமதி மல்லிகா இராசகுரு, உப தலைவி செல்வி சி திலகவதியார், செயலாளர் செல்வி செ பொன்விழி, பொருளாளர் செல்வி ஆ சரஸ்வதி உறுப்பினர்கள் திருமதி நி பத்மநாதன், செல்விகள் ந தேவரேணுகா, ச ஞானேஸ்வரி, க சர்வேஸ்வரி, க தேவமலர், ஆ கலாவல்லி, ஆ வசந்தமலர். [கு]


**றியோ** போன்: 7607
[நாரண்டபம்]
தினசரி: 10-30, 4-45, 7-00,
**MARCOPOLO**
(Adventure)


## இன்றைய பலன்

ஆடி மாதம் 16-ம் திகதி
[புதன்கிழமை]
(1-8-1979)

**மேடம்:** கருத்தொருமித்த காதல் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்ச்சி இடம் பெறும், எதிர்ப்புக்கள் மறைந்து எதிலும் சுகமான சூழ்நிலை உருவாகும். கண்ணிய சேரும், கௌரவம் உயரும்

**இடபம்:** சூழ்ச்சிவலை பின்னும், அடுத்துக் கெடுப்பவர் அருகிலேயே இருப்பர், சகோதரவழியால் சஞ்சலமான சம்பவங்கள் இடம்பெறும், கடன்பட நேரிடலாம், மன அடக்கம் வேண்டும்

**மிதுனம்:** இன்று முன்னணியில் நிற்பீர்கள், நல்ல தீர்ப்பு வழங்கும் சந்தர்ப்பமும் ஏற்படலாம், தெய்வநம்பிக்கை மேலோங்கும், குறிக்கோளில் வெற்றி கிடைக்கும் இலட்சியவாதிகளுக்கு இன்று பொன்னான தினம்.

**கடகம்:** கடமையாற்றுமிடத்தில் புதிய நண்பர்களை தேடிக் கொள்ளுவீர்கள், பொறியியலாளர்களுக்குப் பொன்னான தினம், வேண்டிய ஒருவரிடமிருந்து வரவேற்கத்தக்க செய்தி கிடைக்கும்.

**சிங்கம் :** செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும் உறவினர் ஒருவருக்கு உதவி செய்ய வேண்டிய அவசியம் ஏற்படலாம், உடல் நலத்திலும் முன்னேற்றம் காணப்படுகிறது நல்ல தினம்.

**கன்னி:** துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும், சிறிய தலையிடிக்கு இடமுண்டு, புதிய முதலீட்டை இன்று தவிர்த்துக் கொள்ளவும், பிரயாணத்தைப் பின்போடுவது விரும்பத்தக்கது.

**துலாம்:** அன்னியர்கள் மத்தியில் அதிகம் பழகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாம், வயிற்றுக்கோளாறுக்கு இடமுண்டு, உணவு விடயத்தில் அதிக கவனம் செலுத்தவும், சிலருக்கு நயன ரோகம் தென்படும்.

**விருச்சிகம்:** வாழ்க்கையில் கொந்தளிப்பான நிலைமை தென்படும், சிலர் புலைந்துரைகள் கேட்கவும் நேரிடலாம் உடல்நலம் பாதிக்கப்படலாம், பெண்கள் மிகவும் அவதானம் வேண்டும்.

**தனுசு:** துன்பத்தின் ரேகைகள் படரும், தூக்கம் கெடும், எதிர்பார்த்ததில் தடைகள் ஏற்படும், மனதில் ஆத்திரம் அலைமோதும், வாகனச் சாரதிகள் மிகவும் நிதானத்துடன் இருக்கவும்.

**மகரம்:** நல்லதைச் செய்வீர்கள் பிரமுகர்கள் உங்களைத் தேடிவருவார்கள், சமூகத்தில் மதிப்பு உயரும். அரசியல் வாதிகள் அதிர்ஷ்ட தேவதைகளை அணைத்துக் கொள்வர்.

**கும்பம் :** இனபந்துக்களுடன் உறவு முறையில் பலப்படும், புண்ணிய காரியங்களில் அதிக விருப்பம் ஏற்படும், மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும், இன்று எதிலும் பொதுவாக மகிழ்ச்சி உண்டு.

**மீனம்:** இதயம் எரிமலையாகும், எதிரிகள் தாக்குவர் ஏமாற்றத்திற்கு இடமுண்டு எனினும் இருள் சூழ்ந்த நிலையிலும் ஒளிக்கோடுகள் தென்படலாம் அதிக பேச்சைத் தவிர்த்துக் காரியத்தில் கண் வைக்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

ஆங்கிலப்பேச்சுப்போட்டி

## 3 பிரிவுகளிலும் முதலிடம்

[யாழ்ப்பாணம்]
பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை நடாத்திய சிறுவர்களுக்கான ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் வடமாகாணத்திலுள்ள 18 பாடசாலைகள் பங்குபற்றின.
மூன்று பிரிவுகளிலும் முதல் இடங்களையும் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலைச் சிறுமிகளான செல்விகள் ரேணுகா அருணைநாயகம், ரொமோனா ராஜேந்திரசிங்கம், மனினி அரியரத்தினம் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

## சனசமூக நிலையங்களுக்கு ரூ.100 நன்கொடை

[பண்டத்தரிப்பு]
மானிப்பாய் பட்டணசபை பிரதேசத்தில் இயங்கிவரும் பதிவு பெற்ற இரு சனசமூக நிலையங்களுக்கு இவ்வாண்டுக்கான உதவி நன்கொடைப் பணமாகத் தலை நூறு ரூபாய் வீதம் யாழ். மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் வழங்கியுள்ளார் கட்டுடை சனசமூக நிலையம், மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூக நிலையம் ஆகிய இரு நிலையங்களுக்குமே இவ்வாறு உதவி நன்கொடை வழங்கப்பட்டது. [க]

## பாட நூல்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)
அருட்திரு. இரா யோசவ் அடிகளார் குறிப்பிட்டார்.
பாடசாலை அதிபர் சகோதரி மேரிகதரின் தலைமையில் நடைபெற்ற இந்த நூல் நிலைய திறப்பு விழாவில் ஆசிரியர் சாமுவேல் பெனடிற் பெற்றோர்களையும், பிரமுகர்களையும் வரவேற்று சர்வதேச சிறுவர் ஆண்டின் குறிக்கோள்களைச் சுருக்கமாகக் குறிப்பிட்டார். [க]

## நூல்...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
யாளர் கலாநிதி அ சண்முகதாஸ், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள் திரு ச விநாயகமூர்த்தி, எஸ் பெருமாள், சமாதான நீதிபதி திரு ஆ. சரவணமுத்து ஆகியோர் பாராட்டுரை நிகழ்த்துவார்கள்
சிவஸ்ரீ குகசர்மா, விழாவில் பொன்னாடை போர்த்திப் பொற்கிழிவழங்கிக் கௌரவிக்கப்படுவார் [க]

## எமது..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)
அவர் தொடர்ந்து பேசுகையில், "எமது பிள்ளைகளின் ஆங்கில மொழியிலான தரத்தை வெகுவாக உயர்த்த வேண்டிய நிலையில் நாம் உள்ளோம். ஆங்கில ஆசிரியர்களின் கையிலேயே இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது சுதந்திர வர்த்தக வலயம், பிறநாட்டு முதலீட்டு நிறுவனங்கள் ஆகியவற்றில் ஆங்கில மொழியிலேயே எமது நாட்டவர்கள் பணியாற்ற வேண்டியிருப்பதால் ஆங்கில மொழியில் எமது பிள்ளைகள் தேர்ச்சிபெற வேண்டியது அவசியமாகியுள்ளது இதனைக் கருத்திற்கொண்டே எமதரசாங்கமும் ஆங்கிலப் பாடத்தைக் கட்டாயமாக்கியுள்ளது" என்றார்
ஆங்கிலப் பேச்சு, பாடல், நாடகப் போட்டிகளும் நடாத்தப்பட்டன. [க]

ஐயக்கோன் கொலைமுயற்சி வழக்கு:

# 'பிரேம்குமார் முதலாம் சூட்டுடன் ஓடிவிட்டார்'

## நாகலிங்கம் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

"சூடுபட்ட ஐயக்கோனுடன் காரில் பொலிஸ் நிலையம் சென்று இன்ஸ்பெக்டரிடம், 'சுட்டுப்போட்டார்கள்' என்றேன். அவர் ஓடு ஓடு நிற்காதே ஓடு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போ" என்றார். அங்கிருந்து ஆஸ்பத்திரிக்கு போனேன்."

உடுவில் ஐயக்கோன் கொலை வழக்கில் சாட்சியமளித்த கி. நாகலிங்கம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் ஜமீல் முன்னிலையில் நேற்று இரண்டாவது தினமாக நடைபெற்றது.

இவ்வழக்கில் உடுவிலில் 1975 ஜூலை 11-ம் திகதி சட்டத்தரணி வெ செல்லத்துரையை (ஐயக்கோன்) துப்பாக்கியால் சுட்டு கொலை செய்ய முயற்சித்ததாகவும், அதே நேரத்தில், அதே இடத்தில் க. பிரேம்குமாரை துப்பாக்கியால் சுட்டு கொலைசெய்ய முயற்சித்ததாகவும், செ. மகேந்திரலிங்கம், ச. தம்பிராசா, பொ. சிவரத்தினம் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

1-ம், 2-ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி பாலாதம்பு, சட்டத்தரணி எஸ். லோகேஸ்வரன் அனுசரணையுடன் ஆஜரானார். 3-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி இ. மோதிலால்நேரு ஆஜரானார். அரசதரப்பில் சட்டத்தரணி ஆர். தவராசா வழக்கை நடத்தினார்.

விசாரணையைப் பார்ப்பதற்காக நீதிமன்றத்தில் ஏராளமானோர் திரண்டிருந்தனர்.

கி. நாகலிங்கம் சாட்சிய மளிக்கையில் கூறியதாவது! சம்பவம் நடந்த தினம்காலை 6-30 மணிக்கு ரிச்சரம்மா வீட்டிற்கு போனேன். பணம் கடன் வாங்குவதற்காகவே போனேன்; ஐயக்கோன் அங்கு நின்றார். அவர் காசைக் கொடுக்கும்படி வீட்டில் கூறினார், பின் றோட்டுப்பக்கம் போனார். பிரேம்குமாரும் போனார். நான் 40 யார் பின்னால் சென்றுகொண்டிருந்தேன். ஐயக்கோன் றோட்டில் போய் நின்றார். நான் 6 அடி பின்னால் நின்றேன். அப்போது கார் வந்து நிற்கிற மாதிரி நின்றது அந்தக் கார் சுன்னாகத்திலிருந்து வந்தது.

### 1-ம் எதிரி சுட்டார்

1-ம் எதிரி மகேந்திரலிங்கம் சுட்டார். அப்போது அவர் காரின் முன்சீட்டில் இருந்தார். பின்சீட்டில் 2-ம் எதிரி தம்பிராசா இருந்தார். 3-ம் எதிரி சிவரத்தினம் காரை ஓட்டினார்.

1-ம் சூட்டுக்குப்பின் ஐயக்கோன் திரும்பினார், உடனே 2-ம் எதிரி சுட்டார், ஐயக்கோன் கொஞ்சதூரம் நடந்து சென்று விழுந்துவிட்டார்.

### பிரேம்குமார் ஓடிவிட்டார்

பிரேம்குமார் முதலாம் சூட்டுடன் ஓடிவிட்டார். அந்தக் காரை தெரியும் அது 1-ம் எதிரியின் கார், சுட்டபின் கார் யாழ்ப்பாணம் நோக்கிப் போய்விட்டது. நான் ஓடிப்போய் காரைக் கொண்டு வந்து அவரை காரில் ஏற்றி பொலிஸ் நிலையம் கொண்டு போனேன். அவரின் மகனும் காரில் வந்தார், தகப்பனுடன் பின்சீட்டிலிருந்தார், பொலிஸ் நிலையத்தில் இன்ஸ்பெக்டர் இருக்கவில்லை. உடனே, பொலிஸ் விடுதிக்கு சென்று இன்ஸ்பெக்டரைச் சந்தித்தேன். 'சுட்டுப்போட்டார்கள்' என்றேன், "ஓடு ஓடு நிற்காதே ஓடு ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோ' என்று இன்ஸ்பெக்டர் கூறினார்.

அப்போது அங்கு பீட்டர் வந்து நின்றார், பீட்டர்காரை எடுத்தார், நான் பின்சீட்டில் ஏறினேன், கார் வேகமாக பறந்தது. யாழ். ஆஸ்பத்திரி ஓ பி டியில் அனுமதித்தோம்.

என்ன சமாசாரம் என பீட்டர் கேட்டார். மகேந்திரலிங்கமும், தம்பிராசாவும் சுட்டுப்போட்டார்கள் என்று கூறினேன்.

நான் ஆஸ்பத்திரியில் அனுமதித்துவிட்டு வீட்டைபோய் விட்டேன். ஆஸ்பத்திரி வாட்டிற்கு போக என்னை விடவில்லை. அதனால்தான் வீட்டிற்கு போனேன், பீட்டர் எப்படி போனார் என்று எனக்குத் தெரியாது அவர் என்னுடன் வரவில்லை.

### இன்ஸ்பெக்டரிடம் போனேன்

பின் ரிச்சரம்மாவின் பிள்ளைகள் ஐயக்கோனை பார்க்க ஆஸ்பத்திரிக்கு வரவிரும்பினார்கள், அவர்களை 11-30 மணிக்கு ஆஸ்பத்திரிக்கு கூட்டிவந்தேன். அப்போது இன்ஸ்பெக்டர் என்னை தேடுவதாக ஆஸ்பத்திரியில் சொன்னார்கள். நான் இன்ஸ்பெக்டரை போய் சந்தித்தேன்.

இச்சம்பவத்திற்கு காரணம் இவர்கள் என்பெயடியனோடும், ஐயக்கோனின் பொடியனோடும் புடுங்குப்படுவது தான்.

சட்டத்தரணி பாலாதம்பு குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: ஐயக்கோனை, 1-ம் எதிரி சுட்டதை கண்டதாக உண்மையாக கூறுகிறீர்?-ஆம்

சட்: 2-ம் எதிரி சுட்டதை கண்டதாக உண்மையாக கூறுகிறீர்?-ஆம்.

சட்: காரில் வந்து சுட்டார்கள்?-ஆம்

சட்: 3-ம் எதிரி காரை ஓட்டினார்?-ஆம்

சட்: எதிரிகளின் பெயர்கள் தெரியுமா? ஆம்

சட்: விலாசமும் தெரியுமா? -ஆம்

சட்: ஐயக்கோன் சுட்டபின் உங்களுடன் கதைத்தாரா? -இல்லை

சட்: ஆஸ்பத்திரிக்கு போகும்வரை ஒரு சொல் கதைக்கவில்லை?-இல்லை "என்ன செய்யுது" என்று கேட்டேன் அவர் பதில் கூறவில்லை

சட்: பொலிசுக்கு போக வேண்டும் என யார் தீர்மானித்தது?-நான்

சட்: ஐயக்கோனின் மகன் சம்மதித்தாரா?-சம்மதித்தபடியால்தானே பொலிஸ் நிலையம் போனோம்.

சட்: ஆம் அல்லது இல்லை என்று பதில் சொல்லும்? ஆம்

சட்: மகனுக்கு வேறு ஏதாவது கூறினீரா?-மகேந்திரலிங்கம், தம்பிராசா சுட்டதாக கூறினேன்

சட்: பொலிஸ் நிலையத்திற்குள் போனீரா?-இல்லை

சட்: ஏன் போகவில்லை?-வாசலில் போனேன் இன்ஸ்பெக்டர் இல்லை, அதனால் உள்ளே போகவில்லை, பின் பொலிஸ் விடுதிக்கு போய் இன்ஸ்பெக்டரை சந்தித்தேன்

சட்: பொலிஸ் நிலையத்தில் வேறு பொலிசார் இல்லையா? -நான் கவனிக்கவில்லை

சட்: அங்கு கடமையில் வேறுபொலிஸார் இருந்தும் நீர் இன்ஸ்பெக்டரிடம் போனீர்? பெரிய குற்றமாக இருந்தபடியால் இன்ஸ்பெக்டரிடம் போவது நல்லதென நினைத்தேன்

சட்: இன்ஸ்பெக்டர் விடுதியிலிருப்பதாக யார் சொன்னது?-கந்தோரில் இல்லாததினால் விடுதியிலிருப்பார் என நினைத்தேன்.

சட்: இன்ஸ்பெக்டரிடம் என்ன சொன்னீர்?-'சுட்டுப் போட்டார்கள்' என்று சொன்னதும் ஓடு ஓடு நிற்காதே ஓடு ஆஸ்பத்திரிக்கு கொண்டு ஓடு என்றார்.

சட்: எதிரிகளின் பெயர்களை அவருக்கு சொன்னீரா? -சுட்டுப்போட்டார்கள் என்று சொல்லி முடிப்பதற்குள் ஓடு ஓடு என்றார்.

சட்: ஐயக்கோனை சுட்டதை சொன்னீரா?-ஞாபகமில்லை.

சட்: நீர் பெரிய பொய்க்காரர் என்கிறேன்?-ஊரிக் கேட்டால் அதுபற்றி தெரியும்.

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. (ஸ)

## அன்னை கண்டித்தார்; இளம் பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

தாய் பேசியதால் மனம் உடைந்த இளம்பெண் ஒருவர் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலைசெய்துகொண்ட பரிதாப சம்பவம், பண்டத்தரிப்பிலுள்ள வட்லியடைப்பு என்னும் இடத்தில் நிகழ்ந்துள்ளது.

கனகலிங்கம் யோகேஸ்வரியின் [19 வயது] மரணவிசாரணை தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையில் நடைபெற்றது மரணவிசாரணையில் யோகேஸ்வரியை அவரது தாயார் கண்டித்துப் பேசியதாகவும் அதனால் அவர் மிகவும் வேதனையடைந்து காணப்பட்டார் என்றும், நச்சுத்திராவகம் அருந்தி துடிதுடித்த நிலையில் வட்லியடைப்பில் இருந்து தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோது வழியிலேயே யோகேஸ்வரி மரணமானார் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரிதிரு. எஸ் தம்பிராசா தற்கொலை என்று தீர்ப்புவழங்கினார். (ஸ)


## மரண அறிவித்தல்

திருமதி மங்கையர்கரசி சிவசோதி

25-7-79 அன்று காலமான திருமதி மங்கையர்கரசி அவர்களின் பூதவுடல், தகனக் கிரியைக்காக ஆனைப்பந்தியிலுள்ள அன்னாரது இல்லத்திலிருந்து 1-8-79 (இன்று) பி. ப. 4-00 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். 3198


## யாழ். நிலைமையை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கஸ்பர்ஸ் நேற்றுமுன்தினம், யாழ் பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடந்த கலந்துரையாடலின்போது மேற்கண்டவாறு கூறினார்.

இவரது தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் யாழ்ப்பாணம் எம். பி. திரு வெ. யோகேஸ்வரன், லங்கா பாரத ஒற்றுமை முன்னணி தலைவர் டாக்டர் நாகலிங்கம், வர்த்தக ஊழியர் சங்க செயலாளர் திரு. பாலாதம்பு மற்றும் மனிதன் இயக்கத்தைச் சேர்ந்த திரு. விமலதாசன், மற்றும் யாழ் மாநகரசபை உறுப்பினர் பல்கலைக் கழக மாணவர்கள் சட்டத்தரணிகள் ஆகியோர், கலந்துகொண்டனர்

கொழும்பிலிருந்து வந்தகுழுவில் பிதா போல் கஸ்பர்ஸ், காமினி திஸநாயக்கா டாக்டர் குமார் டேவிட், சல் யோகன தேவானந்தி, ஜயந்தி மலியா கொட, எஸ் பாலகிருஷ்ணன் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

வணபிதா போல் கஸ்பர்ஸ் மேலும் கூறியதாவது! 'தொழிற்சங்கங்களின் உதவியில்லாமல் ஆக்கபூர்வமாக எதையும் செய்யமுடியாமலிருந்தது. 77ல் பல தடவை தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தினோம் அரசியல் கட்சிகளின் உறவு அவசியமென உணர்ந்து தொடர்பு கொண்டோம்,

"ஜூலை 20ம் தேதி நூற்றுக்குமேற்பட்ட பிரதிநிதிகளை கொண்டமாநாட்டை நடத்தினோம். மூன்று விஷயங்கள் இக்கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"யாழ் மாவட்டத்திலுள்ள அவசரகால நிலைமையை வாபஸ்பெறவேண்டும் என்பது ஒன்று வடபகுதியில் நடந்துவரும் சம்பவங்கள் தொடர்பானது இரண்டு. பயங்கரவாத சட்டத்தை அகற்றவேண்டும் என்பது மூன்று தொழும்பிலும், கண்டியிலும், நீதிசமத்துவம், இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது

"யாழ்ப்பாண நிலைமையை நேரில் அறியவே இங்கு வந்துள்ளோம். உங்கள் கருத்துக்களை அறிந்து ஆவனசெய்வோம்.

டாக்டர் குமார் டேவிட், திரு பாலாதம்பு, டாக்டர் தர்மலிங்கம், சட்டத்தரணி எம். பொன்னையா சட்டத்தரணி எஸ் லோகேஸ்வரன் மற்றும்பலர் பேசினார்கள் 12 பேர் கொண்ட கமிட்டி தெரிவானது [ஸ]

## "ஏழு பாவங்கள்" அறப்போராட்டக் குழு பிரசுரம்

[யாழ்ப்பாணம்]

சாவகச்சேரி அறப்போராட்டக் குழு ''ஏழு பாவங்கள்'' என்னும் தலைப்பில் தமிழ்மக்களுக்கென பிரசுரம் ஒன்றை வெளியிடும் பணியினை மேற்கொண்டுள்ளது.

இப்பிரசுரத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் வருமாறு!

''வீடுகளில் இருப்போம், வெளிக் கிளம்ப மாட்டோம்; அகிம்சை வழி நடப்போம்; உண்மையைக் கடைப்பிடிப்போம்.

''எளிமையான வாழ்க்கையைக் கடைப்பிடிப்போம். சீதனத்தை ஒழிப்போம். வருவாய்க்கு உச்சவரம்பு வகுப்போம்.

''நாங்களே எம்மினத்திற்கு ஒழுக்கத்தை கற்பிப்போம். மற்றவர்களின் உரிமையை மதிப்போம்.

''மது, புகைத்தலை ஒழிப்போம்.

''உள்ளூர் பொருட்களை ஆதரிப்போம்.

''பொலிஸ் நிலையங்களுக்கு செல்லோம், நடுவர் குழுக்களை நியமித்து எமது பிரச்சனையைத் தீர்ப்போம்

''பொய் செய்திகளை தரும் பத்திரிகைகளை வாங்கமாட்டோம்'' (ஸ)

## யாருடையவை?

பழுதடைந்த கைக்கடிகாரம் ஒன்றும் திறப்பு ஒன்றும் கஸ்தூரியார் வீதியில் லிங்கம்ஸுக்குமுன் கண்டெடுத்த ஒருவர் அவற்றை 'ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார் இப்பொருட்களைத் தவறவிட்டவர்கள் அலுவலகநேரத்தில் தகுந்த அத்தாட்சிகாட்டிப் பெற்றுக்கொள்ளலாம்

## நம்பிக்கை...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பன், நம்பிக்கை வாக்கெடுப்பின் போது இந்திரா காங்கிரஸ் எவ்விதமாகச் செயல்படவேண்டுமென்பது குறித்து விரைவில் முடிவுசெய்யுமென்று மட்டும் தெரிவித்தார்.

## சிறுவனைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி கோவில் உற்சவத்திற்கு அவிசாவளையிலிருந்து வந்திருந்த சிறுவன் ஒருவன் காணமல்போய்விட்டதாக முறையிடப்பட்டுள்ளது.

அவிசாவளையிலிருந்து தமது தகப்பன் திரு சிவநாதன், தாய் பொன்னம்மா ஆகியோருடன் வந்திருந்த சிறுவன் ரமேஸ்குமார், (7 வயது) நேற்றுக்காலை காணமல்போய்விட்டதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொதுநிறமுடைய ரமேஸ், கடைசியாக ரெஸ்கலர் காற்சட்டையும் நீலசேட்டும் அணிந்திருந்தார்.

## முதலிடம்

[புலோலி]

பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் நடைபெற்ற அமரர் முத்துக்குமாரு ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்திற்கான எழுந்தமானப் பேச்சுப்போட்டியில் செல்வன் பாலசிங்கம் சிவகுமார் முதலாவது இடத்தைப்பெற்றுக்கொண்டார்.


## ஆட்கள் உடன் தேவை

தொழிற்சாலையில் வேலைசெய்வதற்கு உடனடியாக ஆட்கள் தேவை. பயிற்சி அவசியமில்லை. ஆங்கில அறிவு முக்கியம். தொடர்பு கொள்க. சபா சின்னத்தம்பி, மருதனுமடம், சுன்னாகம். 3203


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி 68-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under No QB 6945/78 The Eelanadu P B No [illegible] Telegram: Eelanadu [illegible] 289.